1994 மார்ச் 30]

இன்றைக்கு நடைபெற வேண்டுமென்று அவர்கள் உத்தரவிட்ட பின்னால்தான் வாய்க்கால்கள் அமைக்கின்ற பணிகள் செல்லூர் கண்மாயிலிருந்து செல்கின்ற வாய்க்கால் பணியை வெள்ளநிவாரணப் பணியில் மேற்கொள்ளுதல் போன்ற பணிக்கு 40 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி, இப்படி பல கோடி ரூபாய்க்கான திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் அடிப்படையில் அந்தப் பாலத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அறிந்து அதற்கான மேல் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 148—திரு. கோ. காளன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

148—

அம்பத்தூரில் தொழிலாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டுதல்.

*20502—திரு. கோ. காளன் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூரில் தொழிலாளர்கள் குடியிருக்க வாடகைக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அம்பத்தூரில் தொழிலாளர்கள் குடியிருக்க வாடகைக் குடியிருப்பு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எனவே இவ்வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனைக் கட்டிக் காக்கின்ற இதய தெய்வத்தினுடைய ஆட்சியில் தொழில் நகரமாக விளங்குகின்ற அம்பத்தூரில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள தொழிலாளர்கள் நலனைக் காக்கின்ற வகையில் அவர்களுக்கு தனியாகக் குடியிருப்புக் கட்டி, அங்கே வாடகைக்கு அமர்த்துகின்ற ஒரு நிலைமையை அரசு மீண்டும் பரிசீலனை செய்து வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கென தனியாக வீட்டு வசதியை உருவாக்கித் தருகிற திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். எனினும் இன்றைக்கு அம்பத்தூரில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் பொருளாதாரத்தில் நலிவுற்றப் பிரிவினருக்கு 5,410 மனைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு 94,988 மனுக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 3,315 மனைகளுக்கு 94,136 மனுக்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. எனவே, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்கள் அல்லது தொழிலாளர்கள் போன்றவர்கள் அந்த ஒதுக்கீட்டில் விண்ணப்பித்து அதன் மூலமாக வீட்டுமனைகள் பெற்றுக் கொள்ள வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் என்பது தொழிற்சாலைகள் நிறைந்த இடம். தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற இடம். அங்கே அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் குடியிருக்க வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாக அவர்கள் என்னிடத்தில் வந்து பலமுறை சொல்லியிருக்கிறார்கள். எனவே, அரசு மறுபரிசீலனை செய்து வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற தொழிலாளர்களுக்குக் கொடுக்கின்ற அந்த வசதியை இந்தத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அவர்கள் வீட்டு மனை கோரி மனு செய்து அதன் மூலமாக பெற்றுக்கொள்வதில் எந்தவிதமான ஆட்சேபணைகளும் இல்லை. அங்கே 5,410 மனைகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதில் பல்லாயிரக்கணக்கானவர்கள் மனு செய்து பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் இருக்கின்றன. அந்தக் குலுக்கல் இப்போது நடைபெற்று வருகிறது.